### அ.தி.மு.க.வின் சாதாரணத் தொண்டர் பழனிசாமி அல்ல...

# அரசாங்கத்தையே டெண்டர் எடுத்த ‘டெண்டர்’ பழனிசாமி!

## சென்னை கிழக்கில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சாட்டையடி!

சென்னை, அக். 27–

**சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் 4,250 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில் தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி, எழுச்சிமிக்க உரையாற்றினார்**

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் எதை ஏற்பாடு செய்தாலும் அவரை மிஞ்சுவதற்கு ஆளே இல்லை என்ற அளவிற்குத்தான் அவர் ஏற்பாடு செய்வார். கழக நிர்வாகிகள் 4 ஆயிரத்து 250 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

**விடுமுறை கிடையாது!**

பொங்கல், தீப ஒளித் திருநாள், கிறிஸ்துமஸ், ரம்ஜான், முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள், முதலமைச்சர் நம் கழகத் தலைவரின் பிறந்தநாள், கழக முப்பெரும் விழா என்று எந்த விழாவாக இருந்தாலும், அண்ணன் சேகர்பாபு அவர்கள் தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருபவர். அவருக்கு ஞாயிற்றுக் கிழமை கூட விடுமுறை கிடையாது.

24 மணி நேரமும் வேலை செய்யக்கூடியவர். பலமுறை அவரிடம் கேட்டு இருக்கிறேன்.

உண்மையைச் சொல்லுங்கள் நீங்கள் ஒருவர்தானா, இல்லை உங்களைப்போல, உருவ ஒற்றுமை உள்ள உங்களின் அண்ணனோ, தம்பியோ யாராவது இருக்கிறார்களா என்று கேட்டு இருக்கிறேன். அதுவும், குறிப்பாக ஒவ்வொரு முறையும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு அழைத்து வந்து, நூற்றுக்கணக்கான நலத்திட்ட உதவிகளை அல்ல, பல நூற்றுக்கணக்கான உதவிகளை என் கைகளால் வழங்க வைத்து இருக்கிறார்.

அதற்குப் பலமுறை நன்றி சொல்லிவிட்டேன். ஆனால், இப்போது சமீப காலமாக ஒரு யோசனை.

**மூன்று நிகழ்ச்சிகள்!**

அடிக்கடி வந்து போவதற்குப் பதிலாகப் பேசாமல் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கே வந்துவிடலாமா, இங்கேயே ஒரு வீடு எடுத்துத் தங்கி விடலாமா என்று தோன்றுகிற அளவிற்கு மாதத்திற்குக் குறைந்தது, ஒன்றிலிருந்து மூன்று நிகழ்ச்சிகள் என்னை வைத்து நடத்துவார்.

சில நேரம், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் இருந்து, துறைமுகம் தொகுதிக்கே வந்து விடலாமா என்றுகூடத் தோன்றுகிறது.

என் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில்கூடச் சொல்வார்கள், நிறைய நலத்திட்ட உதவிகள் கொடுக்கிறீர்கள் நாங்கள் உங்கள் தொகுதிக்கு வந்து விடுகிறோம் என்று சொல்வார்கள். ஆனால், எனக்கு துறைமுகம் தொகுதியில் இந்தக் கிழக்கு மாவட்டத்தைப் பார்க்கும்போது, அங்கிருந்து இங்கே வந்துவிடலாமா என்று சில நேரங்களில் அந்த எண்ணம் ஏற்படக்கூடும்.

அதற்குச் சிறந்த உதாரணம் ஒன்று சொல்லட்டுமா, இன்றைக்கு மட்டும் சென்னை கிழக்கு மாவட்டத்தில் இது மூன்றாவது நிகழ்ச்சி. சிறிது நேரத்திற்கு முன்புதான் வேப்பேரி, துறைமுகம், எழும்பூர் தொகுதிகளைச் சேர்ந்த குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்கள் என்று மொத்தம் 1,300 நபர்களுக்கு அந்த ஒரு இடத்தில் மட்டும் நலத்திட்ட உதவிகளைக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தி இருக்கிறோம்.

**தூய்மைப் பணியாளர்கள்!**

அதன்பிறகு, திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியில், வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றுகின்ற குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஆரம்ப சுகாதாரப் பணியாளர்கள் என்று மொத்தம் 1,446 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினோம். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, சென்னையில் பெய்த, ஒரு பெருமழையில் அவர்களின் உழைப்பிற்குக் கொடுக்கின்ற ஒரு அங்கீகாரமாக, நன்றிக்கடன் செலுத்துவதாக அது அமைந்தது. அடுத்து வருகின்ற மழைக்கு அவர்களைத் தயார்படுத்துகின்ற விதமாக அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிவிட்டு, இப்போது இந்த நிகழ்ச்சிக்கு வந்து இருக்கிறேன். இப்படிக் கிட்டத்தட்ட ஒரு மூன்றாயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளைக் கொடுத்து முடித்துவிட்டுத்தான், கழக மூத்த முன்னோடிகளான உங்களைக் கடைசியாகப் பார்க்க வந்திருக்கிறேன்.

**நலத்திட்ட உதவிகள்!**

4 ஆயிரத்து 250 நிர்வாகிகளுக்கு இன்று நலத்திட்ட உதவிகளை வழங்குகிறோம். மக்களுக்கு உதவ வேண்டும் என்றால், முதலில் களத்திற்குச் செல்வது யார் என்று பார்த்தீர்கள் என்றால், அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் நாம்தான். அதனால்தான் மக்கள் நலத் தூய்மைப் பணியாளர்களைப் பார்த்துவிட்டு, இப்போது உங்களைப் பார்க்க வந்து இருக்கிறேன். ஏனென்றால், இரண்டு பேரும் சேர்ந்து உழைத்ததால்தான், இன்றைக்கு இந்தச் சென்னை வெள்ளத்திலிருந்து சீக்கிரமே நாம் மீண்டு வர முடிந்தது.



சமீபத்தில் பெய்த கனமழையின் போது கூட களத்திற்குச் சென்று மக்கள் பணிகளைச் செய்தது, மக்களுக்கு உதவி செய்தது யார் என்று பார்த்தால், நம் தி.மு.கழகத்தைச் சேர்ந்த நம் உடன் பிறப்புகள்தான். இன்னும் சொல்லப்போனால், எதிர்கட்சிக்காரர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்று யாராவது பார்த்தீர்கள் என்றால், கண்டிப்பாக அவர்களுக்குப் பரிசு உண்டு.

**உங்களுக்குத்தான் தெரியும்!**

நான் நான்கு நாட்களாக வீட்டுக்கே போகாமல், தூங்காமல் தெருவில்தான் நின்றுக்கொண்டு இருந்தேன். சென்னை முழுக்கச் சுற்றிக்கொண்டு இருந்தேன். ஒரு இடத்தில்கூட எதிர்கட்சிக் காரரர்களையோ, எதிர்கட்சி கொடியையோ பார்க்க முடியவில்லை. ஆளுங்கட்சியாக நாம் இருப்பதால் இதைச் சொல்லவில்லை. எதிர்கட்சியாக இருக்கும்போதும் களத்தில் இறங்கி, முதலில் மக்கள் பணியைச் செய்தது, நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதனால்தான் தொடர்ந்து சென்னையில், சென்னை மக்கள் நமக்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்குத் தெரியும் எந்த நேரமும் மக்களுடன் நிற்பது யார் என்பது.

நீங்கள்தான் கொட்டும் மழையில் போய் நின்றீர்கள். உங்களுக்குத்தான் அந்தக் களம் தெரியும். உங்களுக்குத்தான் ஒவ்வொரு தெருவும் தெரியும். உங்களுக்குத்தான் ஒவ்வொரு வீட்டின் பிரச்சனையும் தெரியும். உங்களைப் பார்த்துத்தான் விடிய, விடிய மழைக் கால ஆய்வுப் பணிகளைச் செய்தேன். நீங்கள்தான் எனக்கு உத்வேகம்.

இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்னென்ன திட்டங்கள் தேவை என்று கொடுத்த திட்டங்கள் சென்று சேர, நம் முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவையான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார். அதற்குப் பெயர்தான் திராவிட மாடல் அரசு.

**மகளிரின் சுதந்திரம்!**

இங்கு நிறைய மகளிர் வந்து இருக்கிறீர்கள். மகளிரின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிசெய்திட, நம் முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களைக் கொடுத்து இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும்.

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல்பயணம் திட்டம்தான், பிங்க் பஸ். இப்போது அதை யாரும் ‘பிங்க் பஸ்’ என்று கூறுவதில்லை. தலைவரின் பெயரைச் சொல்லி ‘ஸ்டாலின் பஸ்’ என்றுதான் கூப்பிடுகிறார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம். பல மாநிலங்கள் இந்தத் திட்டத்தை அவர்களின் மாநிலத்திற்குச் செயல்படுத்த வேண்டிய பணிகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

**565 கோடிப் பயணங்கள்!**

இந்தத் திட்டத்தின்கீழ் இந்த மூன்றரை வருடத்தில் மட்டும் மகளிர் சுமார் 565 கோடி முறை பயணம் செய்து இருக்கிறீர்கள் என்றால், அதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றி. பணிக்குச் செல்கின்ற மகளிர், இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று, சராசரியாக ஆயிரம் ரூபாய் மாதா மாதம் சேமிக்கிறார்கள்.

இதேபோல் ‘புதுமைப்பெண் திட்டம்’, ‘முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்’, ‘தமிழ்ப்புதல்வன்’, ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ என்று ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

இவ்வளவு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திகொண்டு இருக்கும் போது, ‘தி.மு.க அரசின் சாதனை என்ன?’ என்று ஒருத்தர் கேட்கிறார். அவர் யார் என்று உங்களுக்கே தெரியும். யார் கேட்கிறார் என்றால், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர். இந்தக் கேள்வியைக் கேட்கிறார். எங்கிருந்து கேட்கிறார் தெரியுமா? சேலத்தில் இருந்து கேட்கிறார்.

**தி.மு.க. செய்த சாதனைகள்!**

சென்னையில் மழை வரப்போகிறது என்று தெரிந்து, நான்கூட சரி, மக்களைச் சந்திக்கப் போகிறார், நலத்திட்ட உதவிகள் எல்லாம் கொடுக்கப் போகிறார் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தால், வேகமாகக் கிளம்பி விமான நிலையத்திற்குச் சென்று சேலத்துக்கு விமானத்தில் ஏறிச் சென்று வீட்டில் போய்ப் படுத்துக்கொண்டார். அவர் கேட்கிறார், தி.மு.க செய்த சாதனைகள் என்ன என்று.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களே, பேருந்தில் செல்கின்ற மகளிரிடம் சென்று கேளுங்கள், பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவச் செல்வங்களிடம் சென்று கேளுங்கள், பச்சைக் குழந்தைகளிடம் சென்று கேளுங்கள், தாய்மார்களிடம் சென்று கேளுங்கள் நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை அவர்கள் பட்டியலிடுவார்கள்.

**பதில் சொல்லிவிட்டேன்!**

மக்களைச் சந்தித்து மக்களோடு இருந்தால்தான், மக்களுக்கு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்ன என்று உங்களுக்குப் புரியும். அதுமட்டுமல்ல, இன்னொரு குற்றச்சாட்டையும் தொடர்ந்து அவர் வைத்துக்கொண்டு இருக்கிறார். நான் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதைப் பற்றியும் தொடர்ந்து அவர் விமர்சித்துக்கொண்டு இருக்கிறார். நானும் அதற்குப் பலமுறை பதில் சொல்லிவிட்டேன்.



இளைஞர் அணிச் செயலாளராக என் பணிகளைப் பற்றி, அவரால் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டதில் அவரால் எந்த விமர்சனமும் வைக்க முடியவில்லை. அமைச்சர் என்ற விதத்திலும் என் பணிகளைப் பற்றி அவரால் எந்தக் குறையும் சொல்ல முடியவில்லை.

**தொண்டர் கிடையாது, ‘டெண்டர்’!**

இப்போது என்ன சொல்கிறார். அ.தி.மு.க.வில் சாதாரணத் தொண்டர்கூட முதலமைச்சர் ஆகலாம் என்று அவர் சொல்கிறார். எடப்பாடி பழனிச்சாமி அவர்களே. நீங்கள் சாதாரணத் தொண்டனா? நீங்கள் சாதாரணத் தொண்டர் கிடையாது. நீங்கள் டெண்டர். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் மறைவிற்குப் பிறகு, சசிகலா அம்மாவின் காலில் விழுந்து, இந்த அரசாங்கத்தையே டெண்டர் எடுத்தவர்தான் நீங்கள்.

இன்னொரு குற்றச்சாட்டையும் சொல்கிறார். அவர் அளவிற்கு எனக்கு அனுபவம் இல்லை என்று சொல்கிறார். அனுபவம் இல்லை என்று நானே ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால், அவர் என்னைவிட வயதில் மூத்தவர். அவரின் அனுபவம்தான் என் வயது. உண்மைதான் அவர் என்னைவிட அரசியலில் சீனியர், இல்லை சூப்பர் சீனியர். அந்த அனுபவம் எனக்குத் தேவையும் கிடையாது. அதையும் பெருமையாக நான் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அவரின் கூவத்தூர் அனுபவத்தை இந்த ஒட்டுமொத்த உலகமுமே திரும்பி பார்த்தது. திரு எடப்பாடி பழனிச்சாமி மாதிரி நான் டேபிள் சேருக்குள் புகுந்து யார் காலையும் பிடிக்கவில்லை. தவழ்ந்து சென்று யாரிடமும் பதவி வாங்கவில்லை.

**எனக்குத் தேவையில்லை!**

இப்படிப்பட்ட பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க அனுபவங்களைப் பெற்றவர் யார் என்றால் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். அப்படிப்பட்ட அனுபவங்கள் ஒருபோதும் தி.மு.க. காரனுக்குத் தேவை கிடையாது. அதனால் எனக்குத் தேவையில்லை.

இப்போது புதிதாக இன்னொரு குற்றச்சாட்டு வைத்து இருக்கிறார்கள். நம் அரசின் மீது எந்தக் குற்றச்சாட்டு வைப்பது என்றே தெரியாமல் குழம்பிபோய், இப்போது என்ன தெரியுமா குற்றச்சாட்டு, நான் டி–சர்ட் போட்டு இருக்கேனாம். இவரின் மிகப்பெரிய குற்றச்சாட்டு இதுதான். துணை முதலமைச்சர் எப்படி டி–சர்ட் போடலாம். நீங்கள் கூவத்தூரில் இதுகூடப் போடாமல் சுற்றிக் கொண்டு இருந்தீர்களே? அதை இந்த ஒட்டுமொத்த உலகமும் பார்த்ததே? உங்களுக்கு எல்லாம் வெட்கம், மானம், சூடு, சொரணை இருக்கிறதா? இதை எதிர்த்து, நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறீர்கள். ஏற்கனவே, நான் ஒன்று பேசி, நான் பேசாததைப் பேசியதாகத் திரித்த மோடி அவர்கள் வரைக்கும் கொண்டு சென்று, இந்தியா முழுக்கக் கொண்டுபோய்ச் சேர்த்த பெருமை மோடி அவர்களுக்கு உண்டு.

**பிறப்பால் அனைவரும் சமம்!**

அதற்கு என்னை மன்னிப்பு கேட்கச் சொன்னார்கள். மன்னிப்பு எல்லாம் கேட்க முடியாது. நான் கொள்கையைத்தான் பேசினேன். அம்பேத்கர் சொன்னதைத்தான் பேசினேன். பிறப்பால் அனைவரும் சமம் என்று சொன்னேன். இப்போது இதற்கும் நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள்.

என்ன தெரியுமா வழக்கு. நான் டி–சர்ட் போட கூடாதாம். இன்னொரு குற்றச்சாட்டு, தி.மு.க. கூட்டணியில் விரிசல் விழுந்துவிட்டது என்று, ‘பகல் கனவு’ கண்டுகொண்டு இருக்கிறார்கள். இன்று காலை இரண்டு மணி நேரத்திற்கு முன்பு, நம் தி.மு.க–வின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து கூட்டணிக்கட்சித் தலைவர்களும் நம் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்து இருக்கிறார்கள். நம் கூட்டணி தொடரும் என்று நம் முதலமைச்சர் மட்டுமல்ல, அனைத்துக் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் இன்றைக்குப் பேட்டி கொடுத்து இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் இப்படி.

இன்னொருவர், தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் யார் என்று உங்களுக்குத் தெரியும். தமிழ்நாடு என்ற பெயர் அவருக்குப் பிடிக்காது. அவர் இஷ்டத்திற்குத் தகுந்தபடி என்ன வேண்டுமானாலும் பேசுவார். அதன்பிறகு அவர்களின் வழக்கப்படி மன்னிப்பு கேட்பார். இப்போது தமிழ்த்தாய் வாழ்த்தை மாற்றிப் பாடி வைத்து இருக்கிறார்.

**வழக்கப்படி மன்னிப்பு!**

இன்னொன்று, திராவிடம் என்ற வார்த்தையைக் கேட்டாலே அவருக்கு அலர்ஜி ஆகிவிடும். திராவிடம் என்ற வார்த்தையை எடுத்துவிட்டால், திராவிடமே அழிந்துவிடும் என்ற மன தைரியத்தை நிச்சயம் நாம் பாராட்டியே ஆக வேண்டும். நீங்கள் இல்லை, உங்கள் தாத்தா இல்லை, உங்கள் கொள்ளு தாத்தா வந்தாலும், எங்களின் திராவிடம் என்றைக்கும் யாராலும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது.

நீங்கள் எவ்வளவு முயன்றாலும், தமிழ்நாடு தமிழ்நாடாகத்தான் இருக்கும். நம் கருப்பு–சிவப்புக் கொடி இந்த மண்ணில் பறக்கின்ற வரையில், கலைஞரின் உயிரினும் மேலான உடன்பிறப்புகள், நீங்கள் கடைசிவரை இருக்கும்வரை, கழகத் தலைவரின் தொண்டர்கள் நாம் இருக்கின்ற வரையில், தமிழ்நாட்டையும், திராவிடத்தையும் எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனைப்பேருக்கும், நம் பவளவிழா ஆண்டு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், நம்பிக்கை உள்ளவர்களுக்கு, கொண்டாடுபவர்களுக்குத் தீப ஒளித் திருநாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தினந்தோறும் ஒரு விழாதான்!**

இந்தச் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குத் தினந்தோறும் ஒரு விழாதான். தினந்தோறும் நலத்திட்ட நிகழ்ச்சிகள்தான். அதற்குக் காரணம் அண்ணன் சேகர்பாபு அவர்கள் தான். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் சேகர்பாபு அண்ணன் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் கழகத்தினருக்கு ஏற்கனவே வேண்டுகோள் வைத்து இருந்தார். கழக உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் கழகத்தலைவர் அவர்கள் களத்தில் இருக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார். ஒரு மழை பெய்து முடிந்திருக்கிறது. நேற்று முன்தினம்கூட, திண்டுக்கல்லில் அதிகமான மழை பெய்து இருக்கிறது. உலகம் முழுவதும் ஏன், துபாய், சிங்கப்பூரில் வரலாறு காணாத மழை பெய்து இருக்கிறது.

அதனால், இங்கு பெய்யக்கூடிய மழையில்போது நீங்கள் அனைவரும் உங்களுக்கான பணிகளில் உங்களின் கவுன்சிலர்கள், உங்களின் சட்டமன்ற உறுப்பினர்களிடம் உங்களின் கோரிக்கைகளை வைத்து, எந்தெந்த இடத்தில் என்னென்ன பிரச்சனைகள் இருக்கிறது என்பதை முன்கூட்டியே நீங்கள் அவர்களிடம் தெரிவித்து அதைச் சரிசெய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று மதுரையில் மிகப்பெரிய மழை. ஒரு மணி நேரத்தில் கிட்டத்தட்ட 7 செ.மீ மழை பெய்து இருக்கிறது. சென்னையில் நவம்பர் 15–ஆம் தேதியில் இருந்து டிசம்பர் 1–ஆம் தேதிவரை கண்டிப்பாக மழை இருக்கும் என்று கனிக்கிறார்கள். எனவே, நீங்கள்தான் களத்தில் நின்று மக்களுக்கான அந்தப் பணியை ஆற்ற போகிறீர்கள். கண்டிப்பாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மிகப்பெரிய வெற்றி!**

வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டு காலம்தான் இருக்கிறது. 2024–நாடாளுமன்றத் தேர்தல், நமக்கெல்லாம் ஒரு அரை இறுதி போட்டி. அதில் 40–க்கு 40 என மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள், நம் முதலமைச்சருக்காவும், நம் அரசின் திட்டங்களுக்காகவும் நமக்கு வெற்றியைக் கொடுத்தார்கள். ஆனால், வர இருக்கின்ற 2026–ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தல் இறுதிப் போட்டி. கண்டிப்பாக, நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகக்கூட்டணி வெற்றிப் பெற்றாக வேண்டும். அதற்கான களப்பணியை இன்றிலிருந்தே நீங்கள் எல்லாம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வொருவரும் நம் கழகப் பணிகளுக்காக உழைக்க வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக்கொண்டு வாய்பளித்த சேகர்பாபு அண்ணன் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலச் செயலாளர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ் குமார், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர், வாரியத் தலைவர் ரங்கநாதன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், தேவ ஜவகர், மகாதேவன், புனிதவதி எத்திராசன், ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப். முரளி, ராஜசேகர், முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, வாசு, சோ.வேலு, சுதாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, சந்துரு, கே.எஸ்.என்.நாதன், மகேஷ்குமார், எம்.விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் மணி, செம்மொழி, துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், உதயசங்கர், ரமேஷ், இப்ராஹிம் கனி, நிர்மலாதேவி, பூர்ணிமா, போஸ், கலைச்செல்வி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் ரவிச்சந்திரன், மணிமுடி, ஷேக் அப்துல்லா, மண்டலக்குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, சரிதா மகேஷ்குமார், கு.பி.ஜெயின், நிலைக்குழுத் தலைவர் சாந்த குமாரி, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் பரிமளம், ராஜேஷ் ஜெயின், பார்த்திபன், கவியரசு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.